171

எங்கும் கீர்த்திவாய்ந்த மாஸ்டர்

# S. G. கிட்டப்பா பஜனை

(முதற் பாகம்)



NR
Q2:417
N32
170108

...முதலியாரால் வெளியிட்டது

1932

[அணா 2

உ

கடவுள் துணை.

எங்கும் கீர்த்திவாய்ந்த

# மிஸ்டர் எஸ். ஜி.

# கிட்டப்பா பஜனை.

---

## வெண்பா

எங்கிலும் புகழுற்ற எஸ். ஜி. கிட்டப்பா
சங்கதமிழ் கீர்த்தனைகள் தனைபதிக்க—இங்கிர்தமாய்
ஐங்கரனே ஆறுமுகா அன்னைகலை வாணியரே
பங்காரும் எனக்குத்துணை பரிந்து.

## குகதாஸர் கீர்த்தனை.

### இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி

முத்துக்குமரைய்யனே பக்தர்க்கருள் மெய்யனே (மு)

அநுபல்லவி

நித்தமன்புசெய் குறத்தி யத்தியோ டினித்துவாழும் நாதா உத்தமர்
[மனத்தில் வாழும் பாதா] போதா (மு)

சரணம்

காலகாலனருள் வால தீனபரி பாலா ஸ்ரீலா லோலா
மூலா கருணாலவாலா வேலா கோலா (மு)

கீர்த்திமேவும் வேளூர்த் தலத்திலருள் மூர்த்தியானதூயா
தேவர் சிறை தீர்த்த கார்த்திகேயா கேயா (மு)

2 1|20|08

## ட்டப்பா பஜனை.

சஞ்சலந்தவிர அஞ்சேலென்றருள்செய் தஞ்சம்நீயம்மானே
ன் கெஞ்சி வாழ்த்தினேனே நானே (மு)

ஆசையோடுகுக தாஸன் வாழ்த்தும் முருகேஸ பாஸ நாஸா
அன்பா விஸு... வாஸ ஸுப்ரகாஸா நேஸா (மு)

---

## இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா.

### தெய்வமணிமாலை

ஒருமையுட னினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவா
ருறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய்பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவேண்டு முனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வினால் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலமோங்கும் கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

---

எமது கம்பெனி புஸ்தகம் வேண்டுவோர் எந்த புஸ்தகம் தேவையோ அதன் விலை ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

# சுந்திரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

## இராகம்-சுருட்டி, தாளம்-சதுரச்ர ரூபகம்.

கண்ணிகள்

1 பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லே னெனலாமே

2 நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையு
ளாயாவுனக் காளாயினி யல்லே னெனலாமே

3 ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையு
ளானாயுனக் காளாயினி யல்லேனென லாமே

4 மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன் தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையு
ளழகாவுனக் காளாயினி யல்லே னெனலாமே

5 காரூர்புன லெய்திக்கரை கல்வித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித் திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணை தென்பால் வெண்ணெய்
நல்லூ ரருட் டுறையு
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

### இராகம்-குரஞ்சி, சதுரச்ர தாளம்-ரூபகம்

1 பொன்னார்மேனியனே புலித் தோலையரைக் கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னேயாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லா லினி யாரைநினைக்கேனே.

2 கீளார்கோவணமு திருநீறுமெய் பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன் றலை வாவெனையென்றுகோணீ
வாளார்கண்ணிபங்கா மழ பாடியுள்மாணிக்கமே
கேளாநின்னையல்லா லினி யாரை நினைக்கேனே.

3 சந்தாருங்குழையாய் சடை மேற்பிறைதாங்கிநல்ல
வெந்தாற்வெண் பொடியாய் விடை யேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லா லினி யாரைநினைக்கேனே.

4 வெறியேநின்மலனே நெடு மாலயன் போற்றிசெய்யும்
குறியேநீர்மையனே கொடி யேறிளுடையாள்தலைவா
மறிசேரங்கையனே மழ பாடியுள் மாணிக்கமே
யறியேனின்னையல்லா லினி யாரைநினைக்கேனே.

5 ஏரார் முப்புரமு மெரி யெச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன் மழ பாடியுள்மேயவனைச்
சீரார்நாவலர்கோ னூரா னுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார் பர லோகத்திருப்பாரே.

---

## திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

### இராகம்-தோடி, சதுரச்ர தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

1 மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

2 முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவவினியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயன்திரு நீறே

170108

3 பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லா
மாசைகொடுப்பது நீறு வந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயன் திருநீறே.

4 மாலொடய னறியாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர் கடங்கண் மெய்யது வெண்பொடி நீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவது நீறு
வாலமுதுண்ட மிடற்றெம் மாலவாயன் திரு நீறே.

5 அற்றலடல்விடை யேறுமாலவா யன்திரு நீற்றைப்
போற்றிப் புகலிநிலாவு பூசுரன்ஞான சம்பந்தன்
றேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றியபாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

---

## இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா.

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில்
யானொருவனன்றோ வகையறியேனிந்த
வேழைபடும்பாடுனக்குத் திருவுளச்சம்மதமோ
விதுதகுமோ விதுமுறையோ விதுதருமந்தானோ
மாழைமணிப் பொதுநடனஞ்செய் வல்லான் யானுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்த தந்தையலையோ

கோழையுல குயிர்த்துயர மினிபொறுக்க மாட்டேன்
கொடுத்தருளின்னருளொலியைக் கொடுத்தருளிப்பொழுதே

திருச்சிற்றம்பலம்.

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
னுடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
னுடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுள்
மணியே யென்குருமணியே மாணிக்கமணியே
நடனசிகாமணியே யென்குருமணியே யென்னவமணியே
ஞானநன் மணியே பொன்மணியே நடராஜமணியே.

---

## ப்ரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ணபாரதிகள் கீர்த்தனை

• இராகம் - தன்யாசி, தாளம் - ஆதி.

பல்லவி

கனகசபாபதி தரிசனம் ஒருநாள்
கண்டால் கலிதீரும் (கன)

அநுபல்லவி

சனகபதஞ்சலிமுனி கைதொழுதேத்திய
தினகரகோடி தேஜோன்மயமாகிய (கன)

சரணம்

மனதிலொடுக்கிய கல்மஷம்போக்கும்
மாயப்பிறப்பறுத்து மறுவடிவாக்கும்
ஜனனமரணசமு சாரத்தை நீக்கும்
திருவடி நிழலிலே கூடியேகாக்கும் (கன)

சுருதிமுடிகளில் சொல்லிக்கொண்டாடும்
தூயவெளியையொளி யாகவே கூடும்
தருமநெறியுந்தவ ரூதுளம்நாடும்
ததிங்கிணத்தோமொன்று தாண்டவமாடும் (கன)

பற்பல யோசனை செய்வதுந்தொல்லை
பாகதியடைய வுபாயமுமில்லை
அற்புதமாகவே தாஞெருசொல்லை
அணியுங்கோபால கிருஷ்ணன் பணியுந்தில்லை (கன)

---

## பாரதியார் கீர்த்தனை.

### இராகம்-நாதநாமக்கிரியை, தாளம் ரூபகம்

பல்லவி

சிவலோக நாதனைக்கண்டு சேவித்திடுவோம்வாரீர் (சி)

அநுபல்லவி

பவபயங்களைப்போக்கி அவர்
பரமபதத்தைக் கொடுப்பாரிந்த (சி)

சரணங்கள்

அற்பசுகத்தை நினைந்தோம்
அரன்திருவடி மறந்தோம்
கற்பிதமான பிரபஞ்சமீது
கானல்சலம் போலயெண்ணி (சி)

ஆசைகடலில் விழுந்தோமினி
யறிவுக்கறிவை யிழந்தோம்
பாசமகலவழி தேடாமல்
பரதவிக்கும் பாவியானோம் (சி)

மானிடசன்மங் கொடுத்தார்
தன்னைவணங்கக் கரங்களளித்தார்
தேனும்பாலும் போலேசென்று
தேரடியில்நின்று கொண்டு (ஜ)

---

## இராமயணக் கீர்த்தனை.

### இராகம் - பரசு, தாளம் - மிச்ரசாபு.

பல்லவி

இந்தா விபீஷணா இலங்காபுரி ராச்சியம் (இ)

அநுபல்லவி

இந்திராதி தேவர்கள் உள்ளநாள்வரைக்கும் (இ)

சரணங்கள்

வேதம் உள்ளளவும் வேதகீதம் உள்ளவும் (பா)
சாதம் உள்ளளவும் பஞ்ச பூதம் உள்ளளவும்
இந்தா இந்தா இந்தா இந்தா (இ)

கார் உள்ளளவும் கடல்நீர் உள்ளளவும் ஈரேழ்
பார் உள்ளளவும் என்றன்பேர் உள்ளளவும்
தந்தேன் தந்தேன் தந்தேன் தந்தேன் (இ)

கேள்வியும் நீயே பிரதாபியும் நீயே (எ)

ஆவியும் நீயே சிரஞ்சீவியும் நீயே
சொன்னேன் சொன்னேன் சொன்னேன் சொன்னேன் (இ)

## கிட்டப்பா பஜனை முதற்பாகம்

முற்றிற்று.

---

N. B:—இதன் தொடர்ச்சி இரண்டாம் பாகம் அவசியம் பார்க்கவும்.

---

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றியமையாத

## ஆயுள்வேத சிகிச்சாரத்தினமென்னும்

# குடும்ப வைத்தியம்

உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் நோயற்றவர்களாய் சுகசரீரத்துடன் வாழவேண்டுமெனனும் எண்ணத்துடனேயே நம் முன்னோர்கள் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் அனந்தமாகும். அவற்றை யெல்லாம் ஒருவன் தன்வாழ்நாளில் வாசித்துணர்வதெனின் இயலாததன்றோ? ஆதலே, அக்குறையை அகற்றுவான்வேண்டி பல வைத்திய சாஸ்திரங்களை நன்கு ஆராய் தெடுத்துத் தொகுத்து வெளிவந்துள்ள இக் "குடும்ப வைத்தியம் என்னும் புதிய நூலை வாசித்துணர்வோர் தங்கள் சரீரத்தைப் பா காத்துக்கொள்வதோடு, பிறர்க்கும் பயன்படத்தக்க சிகிச்சைகளை செய்யலாம். இதுபோன்ற வைததியநூல் இதுவரை வெளிவ தில்லை, இப்பொழுதுதான புதிதாக வெளிவந்திருக்கிறது. இந்நூ ஒன்று ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்குமானல், தக்க சமயத்தி வைத்தியனைப்போல் உதவி புரியத்தக்கதாகும். மேலும், இதிலுள் வாசகங்கள் மிகத்தெளிவாகவும், விரிவாகவும் எழுதபபட்டிரு கின்றன.

இதன் விலை ரூ. 1—8—

# மன்மத ஸ்தம்பன குளிகை

நேயர்களே! பலர் பல பெயரிட்டு விளம்பரப் படுத்தியிருக்கு மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனல் சொல்லியபடி நீ கள் குணத்தைக் கண்டிருக்க மாட்டீர்களென்பது நிச்சயம். எங் ஸ்தம்பனகுளிகை அப்பேர்ப்பட்ட தல்ல. கோழியைபபோல் அதி சிரத்தில் ஸ்கலிதமாகும் புருஷர்கள் இந்தக் குளிகையில் ஒன் மாலை 6-மணிக்குச் சாப்பிட்டு இரவு பால் வெற்றிலை யருந்திமுய பார்ப்பாராகில் பெருத்தசுகானந்தம் உண்டாகும். அனுபவித்துப் பவர்களுததான் உணமை விளங்கும். இந்தமாத்திரை டைபக்ஷ சொல்லி யிருபபதுபோல் 1)-நாள் சாப்பிட்டுவந்தால் ஆண்சிங்கத் போன்ற பலமும், ரோஜா புஷ்பம் போன்ற முகதேஜசும், அழ தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட் படுத்துவதில் இதற்கு நிகர்வேறு எதுவுமில்லை. உத்தரவாதம் கிரோம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூபா 2 0 பெயர்விக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க் டவுன், மதரா

மனோரஞ்சினி ப்ரஸ், சென்னை.

17/10/08